CAREERINDIA

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

**Code No. : 10-T**

**CCE PF**
**CCE PR**

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

## Subject : First Language — TAMIL

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ + ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Fresh + Private Repeater )**

**பொதுவான குறிப்புகள் :**

i) இந்த வினா-விடைத்தாள் தொகுப்பானது புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 64-ஐ கொண்டுள்ளது.

ii) ஒவ்வொரு புறவயவகை (Objective type) வினாவிற்கான விடையை எழுத இடம் தரப்பட்டுள்ளது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த விடைக் குறியீட்டு எழுத்துடன் விடையை முழுவதுமாக தரப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும்.

iii) அகவய வினாக்களின் (Subjective type questions) விடைகளை எழுதுவதற்கென போதுமான இடம் தரப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே நீவிர் விடையளிக்கவேண்டும்.

iv) மாணாக்கர்கள் விடைகளை பென்சி ல் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது. (வரைபடங்கள், படங்கள் மற்றும் மேப்புகளைத் தவிர)

v) மாற்று வினாக்கள் தரப்பட்டுள்ள வினாக்களில் ஏதேனும் ஒரேயொரு வினாவிற்கு மட்டுமே விடையளிக்க.

vi) புறவய மற்றும் அகவய வினாக்களுக்கு எதிராக தரப்பட்டுள்ள குறிப்புகளை கடைபிடிக்கவும்.

vii) பல்விடை வினாக்கள் (Multiple choice questions), கோடிட்ட இடத்தை நிரப்புதல் மற்றும் பொருத்துக வகை வினாக்களின் விடைகளில் சுரண்டுதல் / திரும்ப எழுதுதல் / குறியிடுதல்கள் அனுமதிக்கப்படாது. இவ்வாறு செய்தால் அவை மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

viii) மாணாக்கர்கள் வினாத்தாளை படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளது.

ix) வலது பக்க ஓரத்தில் தரப்பட்டுள்ள இடத்தில் எதுவும் எழுத வேண்டாம்.

www.careerindia.com

CAREERINDIA



## பகுதி அ

I. ஒரு தொடரில் விடை தருக : 16× 1 = 16

1. மாணிக்கவாசகர் சிவன் எவ்வுருவில் தோன்றுவதாகக் கூறுகிறார் ?
2. இளையான்குடி மாறர் பெரிய இறைக்கூடையில் எதனைக் கொணர்ந்தார் ?
3. கும்மியடிக்கும் பெண்கள் எதனைத் தள்ளி மிதித்தனர் ?
4. ஈரோடு தமிழன்பன் முரண்படும் பழமொழி யாது ?
5. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?
6. எதை நோக்கமாகக் கொண்டவர்கள் யந்திரமாக மாறுகிறார்கள் ?
7. இளவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர் ?
8. இன்றைய இளைஞன் எவற்றை இடறிவிட வேண்டும் ?
9. இலங்காவித் தீவுகள் எந்த நாட்டின் ஒரு பகுதி ?
10. தம்மக்களது கைப்பட்ட உணவு எப்படிப்பட்டது ?
11. திரு.வி.க. சொற்பொழிவை எவ்வாறு நிகழ்த்துவார் ?
12. இலட்சியம் இல்லாத வாழ்க்கை எதைப் போன்றது ?
13. செய்யுளின் உறுப்புகள் யாவை ?
14. இயைபுத் தொடையில் அமைந்த விடுகதை ஒன்றை எழுதுக.
15. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு யாது ?
16. அடி என்றால் என்ன ?

II. பின்வரும் வினாக்களுக்கு மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக :

16× 2 = 32

17. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்பு யாது ?
18. 'என் கொணர்ந்தாய் பாணா ?' என்றுரைத்த பாடினிக்கு பாணன் உரைத்த மறுமொழி யாது ?
19. சங்கத் தலைவி எவ்வாறு சமைத்தாள் ?
20. நம் தெய்வீகக் கதைகள் உணர்த்தும் உண்மைகள் யாவை ?
21. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் ஏன் கிராமத்தைக் கைவிட்டனர் ?
22. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றை விளக்குக.

www.careerindia.com

CAREERINDIA



23. தமிழ்நாட்டரசர்களைப் பழித்த ஆரிய மன்னர்களுக்கு எதிராக, செங்குட்டுவன் உரைத்த சூளுரை யாது ?

24. பம்பன் தன் இளமைக் காலத்தை எங்கு கழித்தான் ?

25. அணி என்றால் என்ன ?

26. தன் வினை - பிறவினையை எடுத்துக் காட்டுக.

27. மாணிக்கவாசகர் சிவனைப் போற்றி வணங்கும் சிறப்பை எழுதுக.

28. சேக்ஸ்பியர் உரையாடல் கலை எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்கிறார் ?

29. ஆரவல்  க் குன்றின் சரிவில் உள்ள கோயில் பற்றி எழுதுக.

30. இறந்த காலம் குறித்து கவிஞர் வைரமுத்து உரைக்கும் கருத்துகள் யாவை ?

31. ஆகுபெயர் என்றால் என்ன ?

32. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

III. பின்வரும் வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : $11 \times 3 = 33$

33. அறன் வ  யுறுத்தலாக வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.

34. இலட்சியம் குறித்து வைரமுத்து கூறும் கருத்துகளைச் சுருக்கி வரைக.

35. நாமக்கல் கவிஞர் 'என்னுடைய நாடே' என்ற கவிதையில் கூறும் கருத்துகள் யாவை ?

36. 'ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்' - இப்பழமொழியை விளக்கி எழுதுக.

37. புதரில் விழுந்த வித்து போன்றவர் யாவர் ?

38. C.F.C. என்றால் என்ன ? அது ஓசோனில் ஏற்படுத்தும் பாதிப்பு என்ன ?

இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

39. "கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்"

40. "ஒட்ட நறுக்கினும் நன்றியில் நாய்
மொக்கை வாலாட்டும்"

41. "அன்றைக்கு லீவு விடுவாங்களா சார்?"

42. "அவர்கள் எல்லோரையும் தீப்பெட்டி ஆபீசுக்காரன் பைசாவினால் தரையோடு தரையாக அறைந்து வைத்து விட்டான்."

43. "வடவர் உரைத்தது வாய் கடந்தது வசை பொதிந்தது"



www.careerindia.com

CAREERINDIA



IV. பின்வரும் வினாவுக்கு எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக: 3 × 4 = 12

44. இளையான்குடி மாறர் மனைவி சிவனடியாருக்கு அமுது படைக்க சமைப்பதற்காக மேற்கொண்ட செயல்கள் யாவை ?

*அல்லது*

பாரதியார் கூறும் பெண் விடுதலை குறித்த கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

45. பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உரையாடல் சிறப்பிற்கு ஏதேனும் ஒரு நிகழ்ச்சியினை எடுத்துக்காட்டி விளக்குக.

*அல்லது*

கிராமத்தின் மாலை நேரக்காட்சிகளை கி. ராஜநாராயணன் எவ்வாறு விளக்குகிறார் ?

46. நாம் இயற்கையின் சமநிலையை எவ்வாறு கெடுக்கிறோம் ?

*அல்லது*

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விவரி.

V. அடிபிறழாமல் எழுதுக : 1×4 = 4

47. 'இனிமைத் தமிழ்மொழி....' என வரும் பாடல்.

*அல்லது*

'ஈன்று புறந்தருதல்...' என வரும் பாடல்.

VI. 48. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : 4×1 = 4

ஆடலும் பாடலும் இணைந்த கூத்தினை 'பாகவத மேள' என்பர். இக்கூத்தின் தலைவன் பாகவதன் என்ற பாட்டுக்காரன் ஆவான். ஆட்டக்காரர்கள் கா ல் சலங்கையும் மார்பில் மாலையும் அணிந்திருப்பர். கோடங்கி என்பவன் நகைச்சுவைப் பாத்திரம் தாங்குகின்றான். இவன் தாடி, மீசை, பெரிய வயிறு, கூம்பிய தொப்பி முத ய ஒப்பனைகளோடு காட்சி தருவான். மக்கள் கோடங்கி வேடக்காரனை தெய்வமாகக் கருதி அவன் பாதங்களுக்கு வழிபாடு செய்வர்.

வினாக்கள்:

i) எதனை 'பாகவத மேள' என்பர் ?

ii) ஆட்டக்காரர்கள் எவற்றை அணிந்திருப்பர் ?

iii) கோடங்கியின் ஒப்பனை யாது ?

iv) மக்கள் எவ்வாறு கோடங்கியை வழிபடுவர் ?



www.careerindia.com

CAREERINDIA



## பகுதி ஆ

VII. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமை பெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். 10× 1 = 10

49. அடுக்குத் தொடருக்கு எடுத்துக்காட்டு:-

(A) சரசர (B) தளதள

(C) தினம்தினம் (D) கலகல.

50. காடும் காடு சார்ந்த இடமும் ...................................... .

(A) குறிஞ்சி (B) முல்லை

(C) மருதம் (D) நெய்தல்.

51. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடும் போர் முறை ............................. .

(A) வெட்சி (B) வஞ்சி

(C) காஞ்சி (D) வாகை.

52. “கண்ணகி ஏன் நம் மலையில் வந்து விண்புக வேண்டும் ?” இது என்ன தொடர் ?

(A) வியப்புத்தொடர் (B) விளித் தொடர்

(C) வினாத் தொடர் (D) வேற்றுமைத் தொடர்.

53. மோனைத் தொடைக்கு எடுத்துக்காட்டு ........................... .

(A) அறிவு, இரவு (B) சிரிப்பு, பறிப்பு

(C) அழகு, அம்மாடி (D) முற்பகல், பிற்பகல்.

54. செந்தமிழ்

(A) செ + தமிழ் (B) செந்து + தமிழ்

(C) செ + அமிழ் (D) செம்மை + தமிழ்.

55. செய்யுளை சொல்லாலும் பொருளாலும் அழகுபட புனைவது .................. .

(A) அணி (B) மணி

(C) பணி (D) துணி.

www.careerindia.com

CAREERINDIA



56. 'தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினால் சுட்ட வடு' - இதில் இடம் பெற்றுள்ள அணி.

(A) பிறிதுமொழிதல் (B) இரட்டுற மொழிதல்

(C) தற்குறிப்பேற்றம் (D) வேற்றுமை அணி.

57. நனியுண்டு நனியுண்டு - இதில் நனி என்பது

(A) இடைச்சொல் (B) உரிச்சொல்

(C) திசைச்சொல் (D) வடசொல்.

58. இன்டர்நெட் - இதன் தமிழாக்கம்

(A) இணையம் (B) வலைத்தளம்

(C) கட்செவி (D) காட்சித்திரை.

VIII. தொடர்புபடுத்தி எழுதுக: 4× 1 = 4

59. மார்கழி பூத்தது - காலவாகு பெயர்

ஊர் சிரித்தது - ............................................ .

60. இரண்டு சீர்களை உடையது - குறளடி

மூன்று சீர்களை உடையது - ............................ .

61. நான் பஸ்ஸில் வந்தேன் - நான் பேருந்தில் வந்தேன்

இன்றைக்கு லீவு - ........................................... .

62. இமயவரம்பன் - சேரன் செங்குட்டுவன்

கடலுள் மாய்ந்தவன் - ..................................... .

## பகுதி இ

IX. 63. நீ வாழும் பகுதியில் சீரற்று கிடக்கும் பூங்காவின் நிலை குறித்து சரியான தலைப்புடன் 'தினமணி' நாளிதழுக்கு செய்தி எழுதுக. 1 × 5 = 5

*அல்லது*

உன் பள்ளியில் நடைபெறவிருக்கும் இலக்கிய மன்ற விழாவிற்கான அழைப்பு மடல் தயார் செய்க.



www.careerindia.com

CAREERINDIA



X. 64. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை வரைக: 1×5 = 5

அ. இயற்கைச் சீற்றம்

ஆ. கைபேசியின் பயன்பாடு

இ. மாணவரும் பொதுநலத் தொண்டும்.

www.careerindia.com